# அறிமுகம்

2012இல் இலங்கயின் மொத்த சனத்தொகை 20,000,000, முஸ்லிம்கள் 10% - 2,000,000. கிழக்கு மாகாணத்தில் 600,000க்கும் கூடுதலான முஸ்லிம்கள் தமது பாரம்பரிய வசிப்பிடங்களில் வாழ்கின்றனர். இவர்கள்தான் ஆட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகளை முஸ்லிம்களுக்காகத் தேரிவு செய்பவர்கள்.

முஸ்லிம் அரசியல் வாதிகள் தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெறுவதற்கு சமுகப்பற்றினை இடித்துரைப்பார்கள். தேர்தலில் வெற்றி பெற்றதும் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தோடு உடனடியாகக் கூட்டுச் சேர்ந்துவிடுவார்கள். கிழக்கு முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் இன்று ஆட்சியிலுள்ள அரசாங்கத்தோடு கூட்டுச் சேர்ந்துள்ளனர். ஆனால் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் ஏற்படவில்லை.

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட முஸ்லிம்களின் விவசாயக்காணிகள், அக்கரைப்பற்றுப் பிரதேசம் அநியாயமாகப் பிரிக்கப்பட்டமை, சுனாமி கடற் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அக்கரைப்பற்று நுறைச்சோலையில் சவூதி அரசாங்க நன்கொடையினால் ஐந்து வருடங்களுக்கு முன்பதாகக் கட்டப்பட்ட 500 வீடுகள் பயநாளிகளுக்கு இற்றைவரை பகிர்ந்தழிக்கப்படாமை, கல்முனை நிருவாக மாவட்டம், காத்தான்குடி, ஏறாவூர் எல்லைக் கிராமங்களில் உள்ள முஸ்லிம்களின் காணிகள், மட்டக்களப்பு முஸ்லிம் கொலனி பள்ளிவாசல், பாடசாலை, மையவாடி, கிண்ணியா குரங்குபாஞ்சான் முஸ்லிம்களின் மீழ்குடியேற்றம் ஆகிய பிரச்சினைகள் சம்பந்தமாக நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் ஏராளம் ஏராளம்.

20 ஏப்ரல் 2012 வெள்ளிக்கிழமை தம்புள்ளையில் பள்ளிவாசல் உடைக்கப்பட்டு ஜும்மா தொழுகை நடைபெறுவதும் தடைசெய்யப்பட்டமை. அபாயா, நிகாப் உடை அணிந்த முஸ்லிம் பெண்களும் தலையில் தொப்பியும் முகத்தில் தாடியும் வைத்திருக்கும் முஸ்லிம் ஆண்களும் சிங்கள பௌத்த கடும்போக்குவாதிகளாள் பகிரங்கமாக பகடிவதை செய்யப்படுகின்றனர், பன்றி இறைச்சி கறிசமைத்துப் பொது உணவகங்கலில் பரிமாறுதல், ஹலால் விழம்பரம் தீன்பண்டங்களிலிருந்து விலக்கல், சில சிங்கள பௌத்த நபர்கள் தங்களை விஷேட பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனக்கூறிக்கொண்டு முஸ்லிம் சமய கலாசார நிறுவனங்களைச் சோதனையிடுதல், முஸ்லிம்களுக்கு எதிரான கூட்டங்களும், கண்டனப்பிரசாரங்களும் அடிக்கடி அரசாங்க காவல் படையினரால் தடைசெய்யாமல் நடை பெறுதல், மகறகமயில் 2013 பெபரவரி 17ஆம் திகதி நடந்த பகிரங்க கூட்டத்தில் பொதுபலசேன (BBS) முஸ்லிம்களுக்கு எதிராக 10 தீர்மானங்கள் நிறைவேற்றபட்டமை போன்ற சம்பவங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ள சிங்களப் பிரதேசங்களில் கடந்த 18 மாதங்களாக நடந்து வருவது பற்றி அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது இன்று அனைத்து முஸ்லிம்களுக்கும் எற்பட்டுள்ள் பெரும் மனக்குறையாகும். அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தோடு கூட்டுச் சேர்ந்தால்தான் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்ற கருத்து இன்று பொய்யாகிவிட்டது.

இலங்கையில் வாழும் அனைத்து முஸ்லிம்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய தார்மீகப்பபொறுப்பு கிழக்கு மாகாண முஸ்லிம்களைச் சார்ந்ததாகும். பொது பலசேன (BBS), ஜாதிக ஹெல உருமய (JHU) ஆகிய கடும்போக்கு சிங்கள பௌத்த இயக்கங்கள் முஸ்லிம்களுக்கெதிராக நடத்தும் பொய்பிரசாரம் மற்றும் வன்செயல்களைக் கண்டித்து பகிரங்க எதிர்ப்பு ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்தியவர்களும் கிழக்கு முஸ்லிம்கள்தான்.

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டு முதன் முதலில் 1931ஆம் ஆண்டு மே மாதம் நடந்த பொதுத் தேர்தலில் முழு நாட்டு முஸ்லிம்களையும் பிரதிநிதிப்படுத்திய ஒரே ஒரு முஸ்லிம் பிரதிநிதியை கிழக்கு மாகாண முஸ்லிம்களே தெரிவு செய்தனர்.

இன்று கிழக்கு மகாணத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு 7 முஸ்லிம் பிரதிநிதிகளும், 35 ஆசனங்களைக் கொன்ட கிழக்கு மாகாணசபயில் 15 ஆசனங்களும், 37 உள்ளூர் ஆட்சி சபைகளில் முஸ்லிம் பெரும்பான்மை 2 மாநகரசபைகள், 3 நகரசபைகள், 13 பிரதேச சபைகள், மொத்தம் 18 சபைகளும் உள்ளன. இதுதான் இலங்கை முஸ்லிம்களுக்குள்ள அரசியல் பலம். இந்த ஆட்சிமன்றங்களில் உள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் ஒன்றுபடாமல் பிரிந்து செயல்படுவது எமக்குள்ள பெரும் பலவீனம்.

2008 மே மாதம் 10 திகதி நடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் UNPயில் போட்டியிட்டு 9 ஆசனங்களும், அகில இலங்கை தேசிய காங்கிரசும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசும், ஹசன் மௌலவியும், UPFAயில் போட்டியிட்டு முறையே 4, 3, 1 என்ற எண்ணிக்கயில் 8 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டனர். இத்தேர்தலில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த மொத்த ஆசனங்கள் 17. கிடைத்த பலன் 2 மாகாண அமைச்சு, சபாநாயகர் பதவி. ஆனால் வோட்டுப் போட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு இற்றைவரை எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. முஸ்லிமகள் ஒன்றிணைந்து இந்தப் 17 ஆசனங்களையும் பெற்றிந்தால் கூடுதலான ஆசனங்களைப் பெறும் கட்சிக்கு உருத்தான மேலதிக 2 போனஸ் ஆசனங்களும் முஸ்லிம்களுக்கு கிடைத்திருக்கும். மொத்தம் 19 ஆசனங்கள் கிடைத்ததால், 37 அங்கத்தவர்களைக் கொண்ட கிழக்கு மாகாணசபை, முதலமைச்சு, 4 மாகாண அமைச்சு, சபாநாயகர், மற்றும் சபை முதல்வர் ஆகிய முக்கிய பதவிகளும் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய கிழக்கு மாகண ஆட்சி அதிகாரமும் முஸ்லிம்களுக்குக் கிடைத்திருக்கும்.

ஆனால் முஸ்லிம்களுக்குத் தொடர்ந்து ஏற்பட்டுக்கோண்டிருக்கும் தலைவலிக்கு தகுந்த பரிகாரம் செய்யாமல் தலையணையை மாற்றிக்கொண்டேவருகின்றனர். ஆகவே முஸ்லிம்கள் நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்றத் துணிந்து முன்வர வேண்டும். கிழக்கு முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக ஒன்றுபட்டால்தான் உண்டுவாழ்வு.

எம்.ஐ.எம். முஹியத்தீன் 15 செப்டம்பர் 2014